# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 1249/நகராட்சி/2019**

**நாள் : 10/02/2020**

**திரு A.S. மோகன்,**
**குரோம்பேட்டை.** — **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையாளர் / துப்புரவு அலுவலர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**பல்லவபுரம்.** — **எதிர் மனுதாரர்கள்**

செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, தி.கூ.லட்சுமணன் நகர், முதல் தெரு, 8–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A.S. மோகன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முகவரியிட்ட 27.08.2019 நாளிட்ட மனுவின் நகல் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. மனுதாரர் மனு குறித்து அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, தி.கூ.லட்சுமணன் நகர், முதல் தெரு, 8–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A.S. மோகன் என்பவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முகவரியிட்ட மனுவின் நகலினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவில் பல்லவபுரம் நகராட்சிப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மருத்துவமனைகள், தொழில்நிறுவனங்கள், உணவகங்கள் மற்றும் கடைகள் ஆகியவற்றில் சேரும் குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கான சேவைக்கட்டணம் நகராட்சி கணக்கில் செலுத்தப்படுவதில்லை என்றும் சம்பந்தப்பட்ட துப்புரவு அலுவலர் மற்றும் ஆய்வாளர்கள் கையூட்டாகப் பெற்றுக் கொள்கின்றனர் என்று தெரிவித்துள்ளார். மேலும், தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்ட விவரங்கள் தனக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அவ்விவரங்களை தனக்கு வழங்க ஆணையிடக்கோரியுள்ளார். கையூட்டு பெற்று வரும் நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

2. மனுதாரரிடம் 04.02.2020 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனது மனுவில் தெரிவித்த விவரங்களையே விசாரணையின் போதும் உறுதி செய்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முகவரியிட்ட மனுவின் நகல் மட்டுமே இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், குப்பைக் கழிவுகளை அகற்றுவதற்கு கையூட்டு வழங்கும் மருத்துவமனைகள், உணவகங்கள் மற்றும் கடைகள் ஆகியவற்றின் விவரங்கள் குறிப்பிடப்படாததுடன் கையூட்டு பெற்று வரும் நகராட்சி அலுவலர்கள் குறித்த விவரங்களும் மனுவில் தெரிவிக்கப்படவில்லை. மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட விவரங்களை வழங்கவில்லை என்பது குறித்த மேல்முறையீடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் அதிகார வரம்பில் வராது என்பதால் உரிய அமைப்பிற்கு முறையீடு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13.2.20

13/2/2020

13/2/2020

**பெறுநர்**

1. **திரு A.S. மோகன்,**
   **எண்.8, முதல் தெரு,**
   **தி.சு. லட்சுமணன் நகர்,**
   **குரோம்பேட்டை, சென்னை –44**

2. **நகராட்சி ஆணையாளர்,**
   **பல்லவபுரம் நகராட்சி,**
   **பல்லவபுரம்.**

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**